සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

**22 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

சுட்டெண் : ..........................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
* **பகுதி I, 30** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
* பகுதி **I,** பகுதி **II** ஆகியவற்றுக்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்.**

| | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | 1 - 30 | |
| பகுதி II | 1 | |
| | 2 | |
| | 3 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| கணிதப் பரிசோதகர் | | |

## பகுதி I

● ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைக் கொண்டிருக்கும் தெரிவினைத் தெரிவுசெய்து, அதற்குரிய **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** இலங்கையின் 1 : 50,000 இடவிளக்கப் படமொன்றில் சமவுயரக் கோடுகளினால் மாத்திரம் எடுத்துக்காட்டப்படும் மூன்று அம்சங்களை உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) கூம்புக் குன்று, மியாந்தர், அடர்சேர்
(2) சரிவுப் பாறை, குவிவுச்சாய்வு, நெடுங்கோட்டுப் பள்ளத்தாக்கு
(3) குறுக்குப் பள்ளத்தாக்கு, ஆற்றுச்சிறை, வெளியரும்புப் பாறை
(4) நீர்பிரி நிலம், காற்றிடைவெளி, மேட்டுநிலம்
(5) குழிவுச் சாய்வு, சுவடு, ஆற்றுச் சிறை (......)

**2.** இரண்டு கிலோமீற்றர் நீளமான வீதியொன்று 20 சென்ரிமீற்றரினால் காட்டப்படுகின்ற படத்தின் சரியான அளவுத்திட்டம் என்ன?
(1) 1 : 5,000 (2) 1 : 10,000 (3) 1 : 20,000 (4) 1 : 40,000 (5) 1: 100,000 (......)

**3.** சமகணியப் படங்களினால் எடுத்துக்காட்டக்கூடிய இரண்டு புவியியல் அம்சங்களாவன
(1) வீதிகள் மற்றும் வடிகால்
(2) நில ஏற்றம் மற்றும் மழைவீழ்ச்சி
(3) நிலப் பயன்பாடு மற்றும் குடித்தொகை அடர்த்தி
(4) காட்டுப் போர்வை மற்றும் மானிடக் குடியிருப்புக்கள்
(5) நெல் வயல்கள் மற்றும் மண் வகைகள் (......)

**4.** பின்வரும் அளவைகளில் எது தரவுத் தொடரொன்றின் மையப் போக்கினை எடுத்துக்காட்டுகின்றது?
(1) வீச்சு (2) மேற் காலணை (3) இடையம்
(4) ஒகிவு (5) சதமணை (......)

[பக். 2 ஐப் பார்க்க

5. பின்வருவனவற்றுள் எது, இரட்டை பார் வரைபொன்றினால் மிகப் பொருத்தமாக எடுத்துக்காட்டுவதற்கான மாறிகளைக் கொண்டிருக்கின்றது?
(1) மாவட்டங்களின் அடிப்படையில் பெருந்தோட்டப் பயிர்களின் பரம்பல்
(2) இடமொன்றின் வெப்பநிலையும் மழைவீழ்ச்சியும்
(3) வெவ்வேறு கைத்தொழில்களுக்கான மின்சார நுகர்வு
(4) வருடங்களின் அடிப்படையில் ஏற்றுமதிகளின் சேர்க்கை
(5) மாவட்ட அடிப்படையில் சிறு மற்றும் பெரும் பருவங்களுக்கான நெல் உற்பத்தி (......)

6. பூகோள இடநிலைப்படுத்தல் (GPS) முறைமையின் மூன்று பிரதான கூறுகள்
(1) தரைக் கட்டுப்பாட்டுப் புள்ளிகள், வான்வெளிக் கூறு மற்றும் பயனிகள் கூறு
(2) கட்டுப்பாட்டுக் கூறு, வான்வெளிக் கூறு மற்றும் செய்மதிக் கூறு
(3) வான்வெளிக் கூறு, கட்டுப்பாட்டுக் கூறு, மற்றும் பயனிகள் கூறு
(4) வான்வெளிக் கூறு, செய்மதிக் கூறு மற்றும் தரைக் கட்டுப்பாட்டுப் புள்ளிகள்
(5) தரைக் கட்டுப்பாட்டுப் புள்ளிகள், செய்மதிக் கூறு மற்றும் பயனிகள் கூறு (......)

7. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் உடுத்தொகுதியொன்றில் எத்தனை செய்மதிகள் காணப்படும்?
(1) 6 (2) 8 (3) 12 (4) 18 (5) 24 (......)

8. நாடொன்றின் குடித்தொகையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாதிரி என்பதனால் கருதப்படுவது
(1) நாட்டில் வாழும் மொத்த மக்கள்
(2) ஆய்வுக்காக குடியொன்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மக்கள்
(3) ஆய்வு செய்யப்படும் பகுதியில் வாழும் மொத்த மக்கள்
(4) குடிசனக் கணிப்புக்குட்பட்ட பகுதியில் உள்ள மக்கள்
(5) குடித்தொகையில் காணப்படும் ஓரினமான பிரிவினர் (......)

9. சராசரி விலகலின் கூட்டுத்தொகையானது எப்பொழுதும் சமனாக இருப்பது
(1) அவதானிப்புக்களின் எண்ணிக்கைக்காகும்.
(2) பூச்சியத்திற்காகும்.
(3) வீச்சுக்காகும்.
(4) நியம விலகலுக்காகும்.
(5) மொத்த மாறற்றிறனுக்காகும். (......)

10. வகுப்பொன்றிலுள்ள மாணவர்களின் நிறையைக் காட்டும் தரவு
(1) பின்னகத் தரவு (2) தொடர்ச்சியான தரவு (3) பண்புத் தரவு
(4) பெயரளவான தரவு (5) வகுதித் தரவு (......)

11. இளமை நிலையில் உள்ள ஆறு ஒன்றில் காணப்படும் இடவிளக்கவியல் அம்சம் யாது?
(1) ஆற்று ஓங்கல் (2) உயரணை (3) பானைக் குழிவு
(4) பணியெருத்தேரி (5) கழிமுகம் (......)

12. வரண்ட பகுதிகளில் காற்றினால் உருவாக்கப்படும் ஓர் அரித்தல் நிலவுருவம்
(1) தளத்திடைக் குன்று (2) நீள் குன்று (3) சரிவுச்சமதளம்
(4) வாடிகள் (5) பாக்கன் (......)

13. 'குத்துப்பாறை வாற் குன்று' நிலவுருவம் காணப்படும் நிலத்தோற்றம் எது?
(1) வெள்ளச் சமவெளிகள் (2) மலைப் பனிக்கட்டியாறுகள்
(3) கண்டப் பனிக்கட்டியாறுகள் (4) வெப்பமான பாலைவனங்கள்
(5) கரையோரப் பிரதேசங்கள் (......)

14. சுண்ணக்கல் பிரதேசத்தில் இனங்காணக்கூடிய ஒரு நிலவுருவம்
(1) உவாலா (2) படிவுத்திட்டை (3) வாடிகள்
(4) ரொம்போலோ (5) பகாடா (......)

15. இலங்கையில் காணப்படும் உருமாறிய பாறை வகை
(1) கப்ரோ (2) கருங்கல் (3) உறைகளிக் கல்
(4) சுண்ணக்கல் (5) பளிங்கடுக்குப் பாறை (......)

16. அவுஸ்திரேலியாவின் வடகிழக்குக் கரைக்கு அப்பால் தோன்றும் அயனப் புயல் எப்பெயரினால் அழைக்கப்படும்?
(1) ஹரிக்கேன் (2) தைபூன் (3) வில்லி வில்லிஸ்
(4) சூறாவளி (5) பாகியோ (......)

[பக். 3 ஐப் பார்க்க

**17.** காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்கள் இரண்டைக் கொண்ட தெரிவு யாது?
(1) எல்நினோ மற்றும் புவி நடுக்கங்கள்
(2) அமில மழை மற்றும் சூறாவளிகள்
(3) ஓசோன் படையின் தேய்வு மற்றும் காட்டுத் தீ
(4) சூறாவளி மற்றும் சுனாமி
(5) கடல் மட்ட எழுச்சி மற்றும் பாலைவனமாதல் (......)

**18.** அயன மழைக் காடுகளைக் காணத்தக்க இரண்டு பகுதிகளாவன
(1) மேற்கு ஆபிரிக்கா மற்றும் இந்தோனேசியா
(2) வடக்கு வியட்னாம் மற்றும் கலிபோர்ணியா
(3) மத்திய சிலி மற்றும் தென் சீனா
(4) மேற்கு அவுஸ்திரேலியா மற்றும் நைஜீரியா
(5) மலேசியா மற்றும் கலிபோர்ணியா (......)

**19.** 'ராம்சார் பிரகடனத்தின்' பிரதான நோக்கம் என்ன?
(1) வளி மாசடைதலை இழிவளவாக்குதல்
(2) காடுகளைப் பேணிப் பாதுகாத்தல்
(3) ஈர நிலங்களைப் பேணிப் பாதுகாத்தல்
(4) நிலத்தின் தரமிழப்பினை இழிவளவாக்குதல்
(5) பூகோளம் வெப்பமடைதலைக் கட்டுப்படுத்துதல் (......)

**20.** மத்திய தரைக் கரையோரப் பகுதிகளுக்கு வெளியே, மத்திய தரை உயிரினக் கூட்டங்கள் (Biome) காணப்படும் இரண்டு பகுதிகள்
(1) கேப் ரவுண் மற்றும் மத்திய அவுஸ்திரேலியா
(2) கலிபோர்ணியா மற்றும் வடமேல் அவுஸ்திரேலியா
(3) மத்திய ஆசியா மற்றும் கலிபோர்ணியா
(4) மேற்கு ஆபிரிக்கா மற்றும் மத்திய அவுஸ்திரேலியா
(5) கேப் ரவுண் மற்றும் கலிபோர்ணியா (......)

**21.** உலக குடித்தொகையினால் பரந்தளவில் பேசப்படும் மூன்று பிரதான மொழிகள் இறங்குவரிசையில் முறையே
(1) சீன மொழி, ஸ்பானிய மொழி மற்றும் ஆங்கிலம்
(2) சீன மொழி, ஆங்கிலம் மற்றும் ஹிந்தி
(3) ஆங்கிலம், சீன மொழி மற்றும் ஹிந்தி
(4) சீன மொழி, ஹிந்தி மற்றும் ஸ்பானிய மொழி
(5) ஸ்பானிய மொழி, சீன மொழி மற்றும் ஆங்கிலம் (......)

**22.** இலங்கையில் குடித்தொகை அடர்த்தி குறைவாகக் காணப்படும் மாவட்டம் எது?
(1) மன்னார்
(2) மொனராகலை
(3) முல்லைத்தீவு
(4) வவுனியா
(5) கிளிநொச்சி (......)

**23.** நகர மையங்களின் படிமுறையமைப்பை ஏறுவரிசை ஒழுங்கில் சரியாகக் காட்டும் தெரிவு எது?
(1) நகரம், தலை நகரம், பெருநகரக் கூட்டு, பெருநகரம்
(2) நகரம், பெருநகரம், நகரக் கூட்டு, தலை நகரம்
(3) தலை நகரம், நகரம், பெருநகரம், நகரக் கூட்டு
(4) நகரக் கூட்டு, பெருநகரம், தலை நகரம், நகரம்
(5) நகரம், நகரக் கூட்டு, தலை நகரம், பெருநகரம் (......)

**24.** கரும்புச் சீனியை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றின் அமைவிடத்தினைத் தீர்மானிக்கும் பிரதான காரணி யாது?
(1) உயர் தொழில்நுட்பத்தின் கிடைக்கக்கூடிய தன்மை
(2) திறன்மிக்க தொழிலாளர்கள் கிடைக்கக்கூடிய தன்மை
(3) நிதி முதலின் கிடைக்கக்கூடிய தன்மை
(4) மூலப்பொருட்கள் அண்மையில் காணப்படல்
(5) துறைமுகத்துக்கு அண்மையில் காணப்படல் (......)

**25.** 'கிராம நகர' (rurban) பகுதிகளின் பிரதான பண்புகளைச் சரியாகக் காட்டும் தெரிவு யாது?
(1) உயர்மாடிக் கட்டடங்கள், வெளி இடப்பெயர்வு, வர்த்தக நடவடிக்கைகள்
(2) பிரதான போக்குவரத்து மையம், வெளி இடப்பெயர்வு, கைத்தொழிலாக்கத்தினை இல்லாதொழித்தல்
(3) விரைவான இடப்பெயர்வு, வாழிடப் பகுதிகளின் விரிவாக்கம், விவசாய நிலம் குறைவடைதல்
(4) கைத்தொழிலாக்கம். குறைவான வாழிட வசதிகள், மெதுவான இடப்பெயர்வு
(5) உயர்மாடிக் கட்டடங்கள், விவசாய நிலம் குறைவடைதல், குறைவான வாழிட வசதிகள் (......)

இங்கே வெட்டி அகற்றவும்

[பக். 4 ஐப் பார்க்க

**26.** 'பொருத்துக் கைத்தொழில்' வகையைச் சேர்ந்த கைத்தொழில்
(1) கரும்புச் சீனிக் கைத்தொழில் (2) மீனைத் தகரத்திலடைக்கும் கைத்தொழில்
(3) இரும்பு மற்றும் உருக்குக் கைத்தொழில் (4) மோட்டார் வாகனக் கைத்தொழில்
(5) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் (……)

**27.** கலப்பினமாக்கல் மூலம் மிக விரைவாக தமது விளைச்சலைக் குறிப்பிடத்தக்களவு விருத்தி செய்துள்ள இரண்டு பயிர்களாவன
(1) தானியம் மற்றும் சோயா பீன்ஸ் (2) நெல் மற்றும் கோதுமை
(3) சோளம் மற்றும் கோதுமை (4) கோதுமை மற்றும் தினை
(5) நெல் மற்றும் சோளம் (……)

**28.** தற்போது பாரிய அளவிலான சர்வதேச இடப்பெயர்வுப் போக்கு காணப்படுவது,
(1) மேற்கு ஐரோப்பாவிலிருந்து வட அமெரிக்காவுக்கு
(2) மேற்கு ஆபிரிக்காவிலிருந்து லத்தீன் அமெரிக்காவுக்கு
(3) வட ஆபிரிக்காவிலிருந்து தெற்கு ஐரோப்பாவுக்கு
(4) கிழக்கு ஆசியாவிலிருந்து வட அமெரிக்காவுக்கு
(5) தென் ஆசியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு (……)

**29.** 'பருமப்படியான இறப்பு வீதம்' என்படுவது
(1) நடு ஆண்டுக் குடித்தொகையின் தலா நூறுக்கான இறப்புக்களின் எண்ணிக்கை
(2) நடு ஆண்டுக் குடித்தொகையின் தலா ஐந்நூறுக்கான இறப்புக்களின் எண்ணிக்கை
(3) நடு ஆண்டுக் குடித்தொகையின் தலா ஆயிரத்துக்கான இறப்புக்களின் எண்ணிக்கை
(4) நடு ஆண்டுக் குடித்தொகையின் தலா பத்தாயிரத்துக்கான இறப்புக்களின் எண்ணிக்கை
(5) நடு ஆண்டுக் குடித்தொகையின் தலா நூறாயிரத்துக்கான இறப்புக்களின் எண்ணிக்கை (……)

**30.** உலகில் நிலக்கரி ஏற்றுமதியில் ஈடுபடும் இரண்டு பிரதான நாடுகள்
(1) அவுஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா (2) ரஷ்யா மற்றும் சீனா
(3) கனடா மற்றும் அவுஸ்திரேலியா (4) சீனா மற்றும் தென் ஆபிரிக்கா
(5) போலந்து மற்றும் வியட்னாம் (……)

* *

[பக். 5 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

18779

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினாவுக்கும் **2**ஆம் **3**ஆம் வினாக்களிலிருந்து **ஒரு** வினாவையும் தெரிந்தெடுத்து **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம்** விடை எழுதுக.
* 1:50,000 அளவுத்திட்டத்திலமைந்த இரத்தினபுரி இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும் வரைபுத்தாள் ஒன்றும் உமக்கு வழங்கப்பட்டுள்ளது.

**1.** இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுத்திட்டத்திலமைந்த இரத்தினபுரி இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது.

அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு:**

* **படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**
* விடைத்தாளில் தொடர்புடைய **வினா இலக்கத்தினையும் உப பிரிவு இலக்கத்தினையும்** தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
* உமது விடைத்தாளுடன் இடவிளக்கப் படத்தினை இணைக்க **வேண்டாம்.**

(i) படத்தில் **A, B** ஆகிய நாற்பக்கல்களினால் காட்டப்பட்டுள்ள **இரண்டு** வடிகால் அம்சங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) **CD, EF** ஆகிய கோடுகளினால் காட்டப்பட்டுள்ள சாய்வுகளின் **இரண்டு** வகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) நாற்பக்கல் **G** இல் காட்டப்பட்டுள்ள நகரத்தின் அமைவிடம் பற்றிய முனைப்பான அம்சங்களைச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)

(iv) படப் பகுதியில் காணப்படும் மானிடக் குடியிருப்புக்களின் பரம்பல் பற்றிக் கருத்துரைக்குக. (04 புள்ளிகள்)

(v) படப் பகுதியில் காணப்படும் வீதி வலைப்பின்னற் பரம்பலைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(vi) படத்தின் வடமேற்கு காற்பகுதியின் இடவிளக்கவியலுக்கும் நிலப் பயன்பாட்டுக்கும் இடையில் காணப்படும் தொடர்பினைச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)

**2.** (i) நவீன படவரைகலையியல் நுட்பமுறைகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட நவீன படவரைகலையியல் நுட்பமுறைகள் **மூன்றிற்குமான** வரைவிலக்கணங்களைச் சுருக்கமாகத் தருக. (06 புள்ளிகள்)

(iii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளில் ஏதாவது **ஒன்றின்** நன்மைகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில், நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளின் பயன்பாடு தொடர்பில் காணப்படும் **இரண்டு** வரையறைகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**3.** இரண்டு மழைவீழ்ச்சி அவதானிப்பு நிலையங்களில் வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட மாதாந்த மழைவீச்சிப் பெறுமானங்கள் கீழே **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ளன.

**அவதானிப்பு நிலையங்கள் இரண்டில் பதிவு செய்யப்பட்ட மாதாந்த மழைவீழ்ச்சி (mm)**

| மாதம் | நிலையம் | |
|---|---|---|
| | **A** | **B** |
| ஜனவரி | 65 | 44 |
| பெப்ரவரி | 76 | 93 |
| மார்ச் | 62 | 51 |
| ஏப்ரல் | 167 | 32 |
| மே | 215 | 105 |
| யூன் | 165 | 151 |
| **மொத்தம்** | **750** | **476** |

**அட்டவணை 1**

**அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) இரண்டு அவதானிப்பு நிலையங்களினதும் மழைவீழ்ச்சியின் இடையைத் தனித்தனியே கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இரண்டு நிலையங்களுக்குமான மாதாந்த மழைவீழ்ச்சியின் சராசரி விலகல் பெறுமானங்களைக் காண்க. (04 புள்ளிகள்)

(iii) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளை இரட்டை பார் வரைபொன்றில் (Dual bar graph) வகைகுறிக்க. (08 புள்ளிகள்)

(iv) இரண்டு நிலையங்களினதும் மழைவீழ்ச்சியில் காணப்படும் முனைப்பான அம்சங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

* * *

18780

AL/2017/22/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | | |
|---|---|---|---|
| භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>Geography II | 22 T II | | පැය තුනයි<br>**மூன்று மணித்தியாலம்**<br>*Three hours* |

**அறிவுறுத்தல்கள் :**

✳ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) தரைநீர் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) நுகர்விற்காக தரைநீரைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் தரைநீரினால் பெற்றுக்கொள்ளப்படும் **மூன்று** பயன்பாடுகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் நீர் வளங்களைப் பாதுகாத்தல் இன்றியமையாத ஓர் அம்சமாகக் காணப்படுவதற்குரிய **மூன்று** காரணங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) உலகில் எரிமலைகள் மிகச் செறிவாகப் பரம்பிக் காணப்படும் **நான்கு** பகுதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) புறந்தள்ளு எரிமலையின் பிரதான நிலவுருவங்கள் **மூன்றினை,** வரைபடங்களின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) தலையீட்டு எரிமலையின் பிரதான நிலவுருவங்கள் **மூன்றினை,** வரைபடங்களின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) எரிமலைச் செயற்பாட்டினால் ஏற்படும் **மூன்று** சூழலியல் தாக்கங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) கடற்கரையொன்றின் நீள்பக்கப் பார்வையில் காணப்படும் **நான்கு** பிரதான பகுதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) கரையோரப் பகுதிகளில் அலைகளின் செயற்பாட்டுடன் இணைந்து காணப்படும் **மூன்று** அரித்தல் நிலவுருவங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) கரையோரப் பகுதிகளில் காணப்படும் படிவுக்குரிய **மூன்று** நிலவுருவங்களின் உருவாக்கம் பற்றி விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் தென்மேற்குக் கரையோரப் பகுதியில் அலைகளின் செயற்பாட்டினால் ஏற்படும் **மூன்று** பிரதான தாக்கங்களை ஆராய்க. (06 புள்ளிகள்)

**4.** (i) இலங்கையில் சூழலைப் பேணிப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ள **நான்கு** நிறுவகங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட நிறுவகங்களில் ஏதேனும் **ஒன்றினைத்** தெரிவு செய்து, அதன் பிரதான நோக்கங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் சூழலைப் பேணிப் பாதுகாக்கும் சூழலியல் நிறுவகங்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றும் போது எதிர்நோக்கும் **மூன்று** பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் சூழலைப் பேணிப் பாதுகாப்பதில் போதுமானளவு கவனம் செலுத்தப்படாமை காரணமாக ஏற்பட்டுள்ள **மூன்று** விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II - மானிடப் புவியியல்

**5.** இலங்கையில் 2015, 2030 ஆகிய வருடங்களுக்கான குடித்தொகையின் வயதுக் கட்டமைப்பினை A, B ஆகிய வரைபடங்கள் முறையே எடுத்துக்காட்டுகின்றன.




வரைபடம் A




வரைபடம் B

(i) வரைபடம் A இல் காட்டப்பட்டுள்ள, 2015 இன் இலங்கையின் வயதுக் கட்டமைப்பில் இனங்காணக்கூடிய **இரண்டு** முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) வரைபடங்கள் A, B ஆகியவற்றினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள 2015, 2030 ஆகிய ஆண்டுகளின் இலங்கையின் வயதுக் கட்டமைப்பில் ஏற்படும் **இரண்டு** மாற்றங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் வயதுக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏதுவான **மூன்று** காரணிகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் வயதுக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக இடம்பெற்றுவரும் **மூன்று** சமூக பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

**6.** (i) கிராமக் குடியிருப்புக்களின் **இரண்டு** வகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட வகைகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து, அதன் பண்புகளுக்குப் பொறுப்பான **மூன்று** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) நகரக் குடியிருப்புக்களிலிருந்து கிராமக் குடியிருப்புக்களை வேறுபடுத்திக் காட்டும் **மூன்று** பண்புகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய குடியிருப்பு முறைமையில் காணப்படும் **மூன்று** முனைப்பான அம்சங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

**7.** (i) உலகில் இலத்திரனியல் (Electronic) கைத்தொழிலில் முன்னணி வகிக்கும் நாடுகள் **நான்கைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட நாடுகளில், இலத்திரனியல் கைத்தொழிலின் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலத்திரனியல் கைத்தொழில், பாரியதொரு பூகோளக் கைத்தொழிற் துறையாக உருவாகுவதற்கு ஏதுவான **மூன்று** காரணிகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் இலத்திரனியல் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளத்தக்க **மூன்று** நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

**8.** (i) 'சார்க்' (SAARC) அமைப்பின் அங்கத்துவ நாடுகள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'சார்க்' அமைப்பின் **மூன்று** பிரதான நோக்கங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) 'சார்க்' அமைப்பில் அங்கத்துவத்தைக் கொண்டிருப்பதன் மூலம் ஒரு நாடு அனுபவிக்கும் **நான்கு** நன்மைகளை விவரிக்குக. (06புள்ளிகள்)

(iv) 'சார்க்' அமைப்பினால் தற்பொழுது எதிர்நோக்கப்படும் **மூன்று** பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

* * *

VISIT: Past Papers WiKi - Most Extensive Wikipedia of Past Papers

18779

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

**22 I**

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I




SCALE 1 : 50,000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර 20
சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றர்
Contour Interval 20 metres

VISIT: Past Papers WiKi - Most Extensive Wikipedia of Past Papers

WWW.PastPapers.WIKI
VISIT: Past Papers WiKi - Most Extensive Wikipedia of Past Papers